# சமஷ்டியை விட்டுக்கொடோம்!

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாங்கள்சமஷ்டியைக்கைவிடவில்லை. என்ன சொற்கள் பாவிக்கப்படவேண்டுமென்பதிலேயே நாங்கள் விட்டுக் கொடுப்புக்களைச் செய்திருக்கின்றோம். அது உண்மை. அதனை நாங்கள் ஒளித்து மறைக்கவில்லை. இதனை தேர்தலுக்குப் பின்னரும் பகிரங்கமாகவே சொல்லியிருக்கின்றேன்.

**சமஷ்டி என்றால் என்ன?**

அதாவது யாழ் நகரிலே கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துடன் 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 4 மணித்தியாலம் நடந்த விவாதத்திலேயே நான் சொல்லியிருந்தேன். ஏனென்றால். இன்றைக்கு உலகத்தில் இருக்கின்ற அரசமைப்புச் சட்டங்களையும் நாங்கள் பார்க்க வேண்டும். சமஷ்டி என்பது எப்பொழுது? எப்படி? உருவானது, சமஷ்டி என்றால் என்ன, ஒற்றையாட்சி என்றால் என்ன என்று போய்க் கேட்டால் பலருக்கு அதற்கு விளக்கம் தெரியாது.

ஸ்பெயின் நாட்டிலே அரசமைப்புச் சட்டத்திலே ஒற்றையாட்சி என்று எழுதப்பட்டிருக்கின்றது. ஆனால் அங்கு நடப்பது சமஷ்டிஆட்சிதான். அதே போன்று ஒஸ்திரியா நாட்டிலே சமஷ்டி என்று எழுதப்பட்டிருக் கின்றது. ஆனால் அங்கு நடப்பது ஒற்றையாட்சி. ஒற்றையாட்சி எல்லாவற்றிற்கும் காரணமாக இருக்கின்றதாகச் சொல்லப்படுகின்ற மகாபிரித்தானியாவில் இருக்கின்ற அதிகாரப் பகிர்வை நாங்கள்பார்ப்போமாக இருந்தால் எந்தச் சமஷ்டி ஆட்சியிலும் அப்படியான அதிகாரப் பகிர்வே கிடையாது.

**சொல் ஷஷஷஜாலம்**

வட அயர்லாந்திற்கு ஒரு நாடாளுமன்றம். பிரிந்து போகும் உரிமைதான். அயர்லாந்தோடு அவர்கள் விரும்பினால் சேரலாம் என்ற உரிமை. ஸ்கொட்லாந்திற்கு தனியாக ஒரு நாடாளுமன்றம். பிரிந்து போவதற்கான உரிமை. உண்மையிலே சர்வஜன வாக்கெடுப்பு ஸ்கொட்லாந்திலே நடைபெற்றது. ஆனால் அவர்கள் பிரிந்து போக விரும்பவில்லை. ஆனால் மகா பிரித்தானியாவிலும் ஒற்றையாட்சி தான். ஆகையினால் இந்தச் சொற்கள் தான் உண்மையிலே அதன் உள்ளடக்கம் என்று இன்றைக்கு உலகத்திலே எதுவும் கிடையாது. இதிலும் ஒற்றையாட்சி எல்லாவற் றுக்கும் தாய் நாடு மகா பிரித்தா னியாதான். ஆனால் அங்கு இருப்பவை என்ன, நடப்பவை என்ன?

ஆகையினால் நாங்கள் சொற்களைப் பாவிப்பதன் மூலமாக மட்டும் இது சமஷ்டி அல்லது இது ஒற்றையாட்சி என்று எவரும் மக்களை ஏமாற்றக்கூடாது. நாங்களும் ஏமாறக் கூடாது. இந்தியாவிலே ஒற்றையாட்சி என்ற சொல்லும் கிடையாது, சமஷ்டி என்ற சொல்லும் கிடையாது. ஆனால் அதிகாரப் பகிர்வு எப்படியாக இருக்கிறதென்று எங்கள் எல்லாருக்கும் தெரிந்த விடயம்.

ஆனால் ஒற்றையாட்சி என்று சொல் பாவிக்கப்பட்டால் பிறகு வருகின்ற வரைவிலக்கணங்களிலே அது ஒற்றையாட்சியாகவே மாறி விடும் என்ற காரணத்தினாலே ஒற்றையாட்சி என்ற சொல்லைப் பாவிக்காமல் இருப்பதற்கு நாங்கள் எங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்கின்றோம். அதாவது அரசமைப்பில் ஒற்றையாட்சி என்ற சொல் பாவிக்கப்படக் கூடாது. ஓர் ஆட்சி முறையாக 'ஒற்றையாட்சி' என்ற சொல் பாவிப் பதில் ஆபத்திருக்கிறது. அதற்கு நாங்கள் இணங்க மாட்டோம். ஆனால் உள்ளடக்கத்திலே சமஷ்டி முறையிலானவை இருக்க வேண்டும்.

**சமஷ்டிக்கே உரிய குணாதிசயங்கள்**

அதாவது உள்ளடக்கத்திலே சமஷ்டி என்றால் என்ன இருக்க வேண்டும்? அதாவது இந்த இரண்டே இரண்டு குணாதிசயங்கள் தான் இருக்க வேண்டும். அதாவது அதிகாரப் பகிர்வு என்று சில அதிகாரங்கள் மாநிலங்களுக்கு கொடுக்கப்படுகின்ற போது அந்த விடயங்கள் சம்பந்தமாக முழு அதிகாரங்களும் மாநிலத்திற்கு கொடுக்கப்பட வேண்டும். அந்த விடயம் சம்பந்தமாக மத்திய அரசு அதிலே போய் தன்னுடைய ஆதிக்கத்தைச் செலுத்த முடியாத வண்ணமாக இருக்க வேண்டும். அது ஓர் அம்சம்.

இரண்டாவது – கொடுக்கப்பட்ட அதிகாரத்தை அந்த மாநிலத்தினு டைய அங்கீகாரம் இல்லாமல் திரும்பப் பெற முடியாததாக இருக்க வேண்டும்.

இந்த இரண்டு குணவம்சங்களும் இருந்தால் அது சமஷ்டி அரசமைப்புச் சட்டம். இதுக்கு மாறாக எவரும் எங்களிடத்தே விவாதிக்க வந்தால் நானும் விவாதிக்கத் தயார். இந்த இரண்டு அம்சங்களும் இருந்தால் அது என்ன பெயர் சொல்லி அழைத்தாலும் அது சமஷ்டி அரசமைப்புச் சட்டம்தான். இவை இரண்டும் புதிய அரசமைப்புச் சட்டத்திலே இருக்கும். அவை இல்லாத புதிய அரசமைப்புச் சட்டத்தை நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம்.

அப்படியான அரசமைப்புச் சட்டம் வருவதற்கான சாத்தியம் இருக்கின்ற காரணத்தினால் தான். நாங்கள் இப்போது இந்தப் பயணத்திலே இணங்கி, சேர்ந்து செயலாற்றிக் கொண்டிருக்கிறோம். அப்படி வருமென்று நான் உறுதியாகச் சொல்லவில்லை. ஆனால் வருவதற்குரிய சாத்தியக் கூறுகள் இருக்கின்ற வரைக்கும் அதை நாங்கள் எத்தனிக்காமல் விட முடியாது.

**எங்களிடம் இப்போது என்ன இருக்கிறது?**

இப்போது எங்களிடம் வேறு என்ன இருக்கிறது? ஆயுதம் வைத்திருக்கிறோமா? இராணுவம் வைத்திருக்கிறோமா? கடற்படை வைத்திருக்கிறோமா? வான்படை வைத்திருக்கிறோமா? ஆனால் இவை அனைத்தும் இருந்தது. இப்போது இருக்கின்றனவா? எதை வைத்து இதனைச் சாதிக்கப்போகின்றோம் என்பதிலேதான் அரசியல் தலைமைகளுடைய நிதானம் மிக முக்கியமாக இருக்கின்றது.

வெறுமனே பேசிவிட்டுப் போகலாம். மக்கள் தெரிவு செய்யாமல் இருக்கின்ற நிலைமையில் நாங்கள் இப்படிச் செய்கிறோம், அப்படிச் செய்கிறோம் என எவரும் பேசலாம். ஏனெனில் அவ்வாறு பேசுவதில் பிரயோசனம் இல்லைத்தானே. பிறகு நீங்கள் ஏன் செய்யவில்லை என்று அவர்களை ஒருவரும் கேட்க முடியாது தானே. ஏனெனில் அவர்கள் செய்ய முடியாது. அவ்வாறு செய்யும் இடத்திலும் அவர்கள் இல்லை. அவர்களிடத்தில் அந்தப் பொறுப்பை மக்கள் கொடுக்கவில்லை. அவர்களது கைகளில் அந்தப் பொறுப்பு இல்லாத வரைக்கும் அவர்கள் பொறுப்பில்லாமல் பேசலாம். ஆனால் யாருடைய கையில் பொறுப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அவர்கள் பொறுப்பில்லாமல் பேச முடியாது. ஆகையால் நாங்கள் உள்ளதைத்தான் பேசலாம். சாதிக்க முடிந்ததைத்தான் நாங்கள் சொல்லலாம்.

**இணைப்பு எமது அபிலாஷை**

வடக்கு, கிழக்கு இணைப்பு எங்களுடைய அபிலாசையின் ஓர் அடிப்படை. அதில் எந்த விதமான மாற்றுக் கருத்தும் இல்லை. நான் ஒரு தடவை சொல்லியிருந்தேன் – வடக்கு, கிழக்கு இணைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும், ஆனால் உடனடிச் சாத்தியம் இல்லை என்று தான். அவ்வாறு சொன்னதற்கு வடக்கு, கிழக்கு இணைப்பை கைவிட்டு விட்டார்கள் என்று கூறுகின்றனர். ஆனால் நான் அப்படியா சொன்னேன்? உடனடியாகச் சாத்தியமில்லை என்பது எவருக்கும் தெரிந்த உண்மை. அதாவது கட்டுரை கட்டுரையாக ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் எழுதுகின்ற எவராவது சொல்லுவரா உடனடியாகச் சாத்தியம் என்று? அவ்வாறு சொல்லும் துணிவு எவருக்காவது இருக்கின்றதா?

**இணைப்புக்கு யார் எதிரானவர்கள்?**

கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்கள் எங்களுடன் இணங்கி வரும் வரைக்கும் அது சாத்தியம் இல்லை. அது உண்மை. அதைச் சொல்லிக் கொண்டு, இன்னும் கிழக்கில் இருக்கின்ற முஸ்லிம் மக்களை அந்நியப்படுத்துவதற்கான பேச்சுக்களைப் பேசிக் கொண்டிருந்தால் யார் வடக்கு, கிழக்கு இணைப்புக்கு எதிராகச் செயற்படுகின்றார்கள்? முஸ்லிம் மக்களுடைய மனங்களை நோகடிப்பதற்கான பேச்சுக்களையே தொடர்ச்சியாகப் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்தால் வடக்கு, கிழக்கு இணைப்பு ஏற்படாமல் செய்வதற்காகவே அவர்கள் செயலாற்றுகின்றார்களோ என்றே தோன்றுகிறது.

உண்மையில் முஸ்லிம் மக்களைத் திரும்ப அரவணைக்க வேண்டும். அவர்களுக்கு எங்கள் மீது நம்பிக்கை வரவேண்டும். இந்த இரண்டு தரப்பினர்களிலும் பிழைகள் இருக்கின்றன. ஆகவே அதனைத் தீர்க்க வேண்டும். அவ்வாறு தீர்ப்பதற்கான பாதையிலே நாங்கள் அடியெடுத்து வைத்தால்தான் அது சாத்தியமாகும். ஆனால் அதனை நாங்கள் கைவிடப் போவதில்லை. இது முஸ்லிம் மக்களுக்கும் தெரியும். முஸ்லிம் தலைமைகளுக்கும் தெரியும். இன்றைக்கு சாத்தியம் இல்லாவிட்டாலும் வருகின்ற நாட்க ளிலே அது சாத்தியமாகக் கூடிய பயணிப்பிலே நாங்கள் போய்க் கொண்டிருக்கிறோம்.

**முஸ்லிம்களுக்கு நாம் நம்பிக்கை ஊட்டுவோம்**

இன்றைக்கு கிழக்கு மாகாணத்தில் எங்களுக்கு 11 ஆசனங்கள் உண்டு. ஆனால் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு 7 ஆசனங்கள்தான் இருக்கின்றன. அப்படி இருக்கத்தக்கதாக நாங்கள் ஓர் இணைந்த ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறோம். அங்கு தலைமை அமைச்சரைக் கூட முஸ்லிம் காங்கிரஸுக்கே விட்டுக் கொடுத்திருக்கின்றோம். அவ்வாறு கொடுத்தது இணைந்த ஆட்சியை வெற்றிகரமாக இரண்டு வருடங்கள் நாங்கள் நடத்துவதற்கான காரணம் என்ன? முஸ்லிம் மக்களும் தமிழ் மக்களும் சேர்ந்து ஆட்சி செய்ய முடியும் என்பதை இரண்டு மக்களுக்கும் நாங்கள் காண்பிக்க வேண்டும்.

அந்த நம்பிக்கை ஏற்படுத்தப்படவேண்டும். அப்படியான செயல்கள் நடைபெறவேண்டும். ஏனெனில் யுத்த காலத்தில் பல விடயங்கள் நடந்தன. அதனால் மனப் பாதிப்புக்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவை ஆறவேண்டும். ஆறுகின்ற போது தான் அதற்கான சாத்தியம் வரும். ஆனால் அது சாத்தியப்படுகின்ற வரைக்கும் அரசமைப்புச் செய்யாமல் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. இந்திய – இலங்கை ஒப்பந்தத்திலும் வடக்கு, கிழக்கு இணைப்பு இருந்தது. ஆனால் சர்வஜன வாக்கெடுப்பு என்ற நிபந்தனையும் இருந்தது. ஆகையினால் இந்த விடயங்களை அறிந்து எப்படியாக நாங்கள் நகர வேண்டும் என்பதைத் தீர்மானித்தல் அவசியம். எல்லாம் கிடைத்தால் தான் ஏற்றுக் கொள்ளுவோம் என்கின்ற நிலையில் இருந்தால், நாங்கள் அப்படியான நிலைப்பாட்டை எடுத்து தோல்வியுற்ற மக்களாகவே இருப்போம்.

**வெளியுறவுச் செயலர் இங்கு கூறியவை என்ன?**

இந்திய வெளியுறவுச் செயலாளர் அண்மையில் இங்கு வந்திருந்தார். எங்களையும் சந்தித்திருந்தார். ஆனால் அவர் வடக்குக் கிழக்கு இணைப்புச் சாத்தியமில்லை, அதைக் கைவிடுங்கள் என்று சொன்னார் எனப் பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. ஆனால் அப்படி அவர் சொல்லவில்லை. அந்தப் பேச்சு வார்த்தையில் நாங்களும் இருந்தோம். இருந்தும் சுரேஷ் பிறேமச்சந்திரன்தான் அவ்வாறு இந்திய வெளியுறவுச் செயலாளர் தெரிவித்தார் எனப் பத்திரிகைகளுக்குக் கூறியிருக்கின்றார். வெளியுறவுச் செயலாளர் எங்களிடம் கூறியவை 'உங்கள் கோரிக்கைகள் ஒன்றையும் நீங்கள் விலக்க வேண்டிய அவசியமில்லை. அவற்றை மேசையிலையே வைத்துக்கொள்ளுங்கள்' என்பதுதான். ஆனால் பெறக் கூடியதைப் பெற்று முன்னேறுங்கள் என்றும் அவர் சொன்னார். அது வேண்டாம் என்று சொல்லவில்லை. அதனை அடைகின்ற வேளையில் நாங்கள் அடையலாம் என்றும் அவர் சொல்ல, அதனை வெளியே சென்று பத்திகைகளுக்கு அவர் வடக்கு, கிழக்கு இணைப்பு வேண்டாம், இல்லை என்று கூறினார் என சுரேஷ் பிறேமச்சந்திரன் கூறியிருக்கின்றார்.

இப்போது யாருக்கு இந்தக் குழப்பம் தேவையாக இருக்கிறது? மக்கள் சிலரின் கைகளில் தான் இந்தப் பொறுப்பைக் கொடுத்திருக்கிறார்கள். சிலரை வேண்டுமென்றோ முடிவு செய்து அவர்களிடத்தே பொறுப்புக் கொடுக்கக் கூடாதென்றும் தீர்மானித்திருக்கின்றார்கள். அவ்வாறு மக்கள் யார் குறித்துத் தீர்மானித்திருக்கிறார்களோ அப்படியானவர்கள் தான் குழப்பத்தில் ஈடுபடுகிறார்கள்.

**கடத்தியோரே இங்கு போராட்டம் நடத்துகின்றனர்**

வவுனியாவில் காணாமலாக்கப்பட்டவர்களிற்கான போராட்டமொன்று நடைபெற்றது. அந்தப் போராட்டங்கள் நியாயமானவை. அவ்வாறு காணாமலாக்கப்பட்டவர்களிற்காக நாங்களும் போராடியவர்கள்தான். இப்போது அதற்கான செயற்றிட்ட நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருக்கின்றோம். காணாமலாக்கப்பட்டவர்களின் அலுவலகமொன்றைத் திறப்பதில் முழுமையாக ஈடுபட்டிருந்தோம். ஆனால் அதற்கு ஆதரவாக ஓர் அரசியற் கட்சி சேர்ந்து போராடப் போகின்றதாம். எனக்குத் தெரிந்த வகையில் வவுனியாவில் அந்த அரசியற் கட்சி பல இளைஞர்களைப் பிடித்துக் கொண்டு சென்றதை நான் கண்ணால் கண்டிருக்கிறேன். பலரை காணாமலாக்கியவர்கள் அவர்கள் தான் என்பதும் எல்லாருக்கும் தெரிந்த விசயம்.

ஒரு சம்பவத்தைச் சொல்லுகிறேன். அது இங்கு தான் நடந்தது. அது என்னவெனில் பான்– கீ – மூன் யாழ்ப்பாணத்திற்கு வந்த போது யாழ். நூலகத்திற்கு வெளியாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அப்போது நாங்கள் அவரைச் சந்தித்து விட்டு நூலகத்திற்கு வெளியே வந்து அந்த மக்களுடன் பேசுகிறோம். அங்கு சில பெண்கள் "சுமந்திரா, சம்பந்தா எங்கள் பிள்ளைகளைக்கொண்டு வந்து தா. ஏன் கொண்டு போய் வைத்திருக்கிறாய்?" – என்று ஒப்பாரி வைத்துக் கத்தினார்கள். சம்பந்தன், சுமந்திரன் பெயர்தான் அங்கு சொல் லப்பட்டது. நாங்களா கொண்டு சென்றோம் என்று கேட்டேன். அவர்கள் கத்தினார்கள். நாங்கள் பொருட்படுத்தவில்லை.

**சித்தார்த்தன் கூறியவை**

நாங்கள் நடந்த விடயத்தை சொல்லிவிட்டுத் திரும்புகின்ற போது அண்ணன் சித்தார்த்தன் எனக்குப் பக்கத்தில் நின்றார். "அண்ணன் என்ன நீங்கள் நிற்கின்றீர்கள்?" – என்று நான் கேட்டேன். அப்போது அவர் "உங்களைத்தனியவிடவிரும்பவில்லை. நான் பக்கத்தில நிற்கிறேன்" – என்று சொன்னார். அப்படிச் சொல்லிவிட்டு "இவர்கள் ஏன் சம்பந்தன் அண்ணனிட்டையும் உங்களிட்டையும் கேட்கின்றார்கள்? அதனை எங்களிட்டக் கேட்டாலும் பரவாயில்லை." – என்று அவரே சொன்னார்.

இந்த விடயங்களோடு எந்த சம்பந்தமும் இல்லாத உங்கள் இரண்டு பேரிடமுமெல்லோ அவர்கள் கேட்கின்றனர் என்றார். அப்போது நான் "இது அவர்கள் கேட்கவில்லை. அவர்கள் பாவம். அவர்களுக்கு எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் அவர்கள் அதனை எங்களிடம் கேட்கிறார்கள்" – என்று சொன்னேன்.

இங்கு ஒரு தொலைக்காட்சி செய்தியை நீங்கள் பார்த்தீர்கள் என்றால் ஒரு மைக்கை பிடித்து ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவரிடம் கேள்வி கேட்பார்கள். இதைப்பற்றி என்ன சொல்

(18 ஆம் பக்கம் பார்க்க)